பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

20 08 2026 6 45

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று, கோவளத்தில் நடைபெறுகிறது.
- பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியில் இன்று ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் Shinjiro Koizumi-யை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.
- தமிழ்நாடு உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் புதிய ரயில்வழித்தடங்களை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரவேற்றுள்ளார்.
- மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் துணை நிற்கும் என்று மாநில காங்கிரஸ் தலைவர் திரு. மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.
- உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா, 5-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

தென் மாநிலங்களின் முதலமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் இன்று, செங்கல்பட்டு மாவட்டம் கோவளத்தில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, கேரளம், தெலங்கானா மாநிலங்களின் முதலமைச்சர்கள் மற்றும் புதுச்சேரி முதலமைச்சர், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

இதில் கலந்துகொள்வதற்காக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நேற்றிரவு சென்னை வந்தார்.

விமான நிலையத்தில் அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் கோவளத்தில் உள்ள தனியார் விடுதியில் திரு. அமித் ஷாவை தமிழக முதலமைச்சர் திரு. விஜய் சந்தித்துப் பேசினார்.

இந்த மாநாட்டை ஒட்டி, சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், புதுதில்லியில் இன்று ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் Shinjiro Koizumi-யை சந்தித்து இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத் துறையில் நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஸ்திரத்தன்மை, பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்துவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கடலோர பாதுகாப்பில் ஒத்துழைப்பு குறித்த கருத்துகளையும் இரு தலைவர்களும் பரிமாறிக்கொள்வார்கள் என்றும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் நேற்று மும்பையில் கடற்படை தளத்தை பார்வையிட்டு, கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் கிருஷ்ண சாமிநாதன் மற்றும் கடற்படை உயரதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

<<<<>>>>

தமிழ்நாடு உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் ரயில்வே வழித்தடங்களை ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்திருப்பதற்கு தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் ரயில் இணைப்பு வசதியை மாற்றியமைக்கக் கூடிய திட்டங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய ரயில் வழித்தடங்களில் பயணிகள் நெரிசலைக் குறைத்து, சரக்குப் போக்குவரத்தை அதிகரிப்பதுடன், வளர்ச்சியடைந்த இந்தியாவை நோக்கிய பயணம் இதன்மூலம் வலுப்பெறும் என்றும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் என்றும் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே அவர் வெளியிட்டுள்ள மற்றொரு சமூக வலைதளப் பதிவில், தென் மாநில முதல்வர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக தமிழகம் வந்துள்ள உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை மாநில மக்களின் சார்பில் வரவேற்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகம் முழுவதும் 206 கோடி ரூபாய் செலவில் 27 தடுப்பணைகள் அமைக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், 13 மாவட்டங்களில் இந்த தடுப்பணைகள் அமைக்கப்பட உள்ளதாக அறிவித்தார்.

35 மாவட்டங்களில் 28 கோடி ரூபாய் செலவில் செயற்கை நிலத்தடி நீர் செறிவூட்டும் குழாய்கள் அமைக்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திரு ஆனந்த் வெளியிட்டார்.

<<<<>>>>

மேகதாது அணை விவகாரத்தில் தமிழக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் துணை நிற்கும் என்று தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேகதாது பகுதியில் கர்நாடக அரசு அணை கட்டக் கூடாது என்ற முடிவில் தமிழக காங்கிரஸ் உறுதியுடன் உள்ளதாக கூறினார்.

இந்த விவகாரத்தில் கர்நாடகத்திற்கு மத்திய அரசு உதவக் கூடாது என்றும் திரு. மாணிக்கம் தாக்கூர் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் வாசனை திரவ தொழிற்சாலை அமைக்க தவெக அரசு முன்வர வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், கிருஷ்ணகிரி மாவட்ம் காவேரிபட்டணத்தில் போதிய விலை கிடைக்காததாலும், சந்தைப்படுத்த முடியாத தாலும் ஒன்றரை டன் மல்லிகைப் பூக்களை விவசாயிகள் தென்பெண்ணை ஆற்றில் வீசிச் சென்றுள்ள சம்பவத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைக் கருத்தில்கொண்டு பூக்கள் அதிகம் விளையும் கிருஷ்ணகிரி, தருமபுரி, மதுரை, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை உள்ளிட்ட இடங்களில் அரசு சார்பில் செண்ட் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்றும் முதலமைச்சருக்கு திரு. நயினார் நாகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் பாரத் பெட்ரோலிய நிறுவனம் 10 கிலோ எடைகொண்ட Bharat Gas Ziplite சேவையை முதல் முறையாக தொடங்கியுள்ளது.

எடை குறைவாகவும், துருப்பிடிக்காத வகையில் ஃபைபர் தொழில்நுட்பத்திலும் இந்த சிறிய வகை சிலிண்டர் தயாரிக்கப்பட்டுள்ளதால் பயன்படுத்த எளிதாக இருக்கும் என்று நீலகிரி மாவட்ட பாரத் பெட்ரோலிய நீலகிரி மாவட்ட கிளை மேலாளர் திரு. வசந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

தேசிய வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம் தோப்பூர் கிராமத்தில் தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் வயல்வெளிப் பள்ளி நடைபெற்றது.

இதன் மூலம் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தென்னை விவசாயிகள் பயனடைந்ததாக அறிவியல் மையத்தின் தலைவர் திரு. சுந்தர்ராஜ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

தென்னை மரங்களைத் தாக்கும் நோய்கள் குறித்து தாங்கள் அறிந்துகொண்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காங்கோ நாட்டில் எபோலா தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 5 ஆயிரத்தை தாண்டியுள்ள நிலையில், 2 ஆயிரத்து 378 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<>>>>

பங்களாதேஷில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 35 ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று நடைபெறுகிறது.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சம்மேளன தலைவர், புதுதில்லியில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவை சந்தித்துப் பேசினார்.

<<<<>>>>

தில்லியில் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் ஒருபகுதியாக, 200 புதிய மின்சார பேருந்துகளை துணைநிலை ஆளுநர் திரு. தரன்ஜித் சிங் சாந்து, முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திருமதி பத்மஜா தலைமையில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டி வீரனின் 250வது வீரவணக்க நாளை முன்னிட்டு, தென்காசி மாவட்டத்தில் இன்று 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு கிராமத்தில் பல்வேறு துறைகளின் கீழ் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி கவிதா, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிறைவேற்றப்படும் அரசு நலத்திட்டங்கள் குறித்து, அனைத்து துறை அலுவலர்களுடன் ஆட்சியர் திருமதி சினேகா ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்புக் கல்வியாண்டில் மருத்துவப் படிப்புகளில் ஏழரை சதவீத உள்ஒதுக்கீட்டின் கீழ், 614 அரசுப் பள்ளி மாணவர்கள் ஒதுக்கீடு பெற்றிருப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் காரணமாக, நான்கு விரைவு ரயில்கள் வரும் 26ஆம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 5-3 என்ற கோல் கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

நெதர்லாந்தின் Amstelveen-ல் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி வீரர்கள் தொடக்கத்தில் இருந்தே அடுத்தடுத்து கோல்கள் போட்டனர்.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இந்திய ஹாக்கி அணியின் வெற்றிக்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே உலகக் கோப்பை ஹாக்கி மகளிர் பிரிவில் இந்திய அணி இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டி மாலை மணி 6.30க்கு தொடங்குகிறது.

**<<<<>>>>**